International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 01 January to March 2025 www.irjtsjournal.org

# திருக்குறளில் பரிமேலழகரின் உரைச்சிறப்புக்கள்

முனைவர் வே.ரேணுகா

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

திருச்செங்கோடு -637218

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வுலகில் அறம் கூறும் நூல்கள் பல உள்ளன. எனினும், திருக்குறள் மட்டுமே அறங்கள் பலவற்றைக் கூறி, அதனை ஏற்பதால் தனிமனிதனுக்கும், மனித குலத்திற்கும், இவ்வுலகிற்கும் கிடைக்கும் தீர்வுகளை எடுத்துரைக்கின்றது. அரசனை தெய்வம் என்று கூறாது அவன் செய்யும் கடமைகளின் வழி நின்றே மக்கள் அவனை ஏற்பர் என்று கூறுகின்றது. உழவின் மேன்மையை மிகத் தெளிவாகவும், உயர்வாகவும் எடுத்துரைக்கின்றது. இன்பத்துப்பாலை களவு, கற்பென இருநிலையில் பிரித்து அன்பு வாழ்க்கையை முறைப்படுத்திக் காட்டுகின்றது. அவ்வகையில்,

“வள்ளுவரோ மனு ஆதி
ஒரு குலத்துக்கு ஒரு நீதி”

எனும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் கூற்றிற்கு ஏற்ப, தமிழ்ச் சமூகத்தின் அணையா விளக்காம் திருக்குறளை பரிமேலழகரின் உரையின் துணை கொண்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**முன்னுரை**

திருக்குறள் உலகம் தழுவி எழுதப்பட்டதொரு பெருநூல் ஆகும். இந்நூல் வாழ்வியல் அறங்களை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையுடையது. கற்றறிந்த பேராசிரியப் பெருமக்களால் போற்றப்படுவது. இந்நூலுக்குக் கிடைத்த உரையாசிரியர்கள் போல் உலகில் வேறு எந்நூலிற்கும் உரையாசிரியர்கள் கிடைத்ததில்லை என்பதே இந்நூலின் தனிச்சிறப்பு ஆகும். அவ்வகையில் திருக்குறளுக்கு உரை கண்ட உரையாசிரியர்கள் பலருள்ளும் பரிமேலழகரின் உரைசிறப்புக்கள் குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**ஆசிரியர் குறிப்பு**

இலக்கியச் சான்றாதாரங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் பிற குறிப்புகள் முதலானவற்றின் துணைகொண்டு பரிமேலழகரின் வரலாற்றினை ஓரளவு அறியமுடிகின்றது.

- தொண்டைமண்டலச் சதகம் - 41 ம் பாடல் பரிமேலழகர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர் எனக் குறிப்பிடுகின்றது.

- சாசனத் தமிழ்க்கவி சரிதமும் - கல்வெட்டுச் சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பரிமேலழகர் காஞ்சி மண்டலத்தைச் சார்ந்தவர் எனக் குறிப்பிட்டுள்ளது.
- மு.இராகவையங்கார் பரிமேலழகர் வைணவ சமயத்தினர் அல்லது அச்சமயத்தின் பால் பற்றுடையவர் எனக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தினை கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநர் கே.வி.சுப்பிரமணியம் ஏற்றுள்ளார். (கொங்கு மலர், தொ. 2, பக் - 244)
- பரிமேலழகரின் காலம் கி.பி 13 ம் நூற்றாண்டு என்பது அறிஞர்களின் பொதுவானக் கருத்தாகும்.

**திருக்குறளும் பரிமேலழகரும்**

“எல்லாப் பொருளும் இதன் பால் உள” என்னும் பொருண்மையினைப் பெற்றது திருக்குறள் ஆகும். ஆதலால் இந்நூலுக்கு உரை கண்டோர் கல்வியிற் சிறந்தோராகவும், பல்துறை வித்தகராகவும் திகழ்ந்தனர். இத்தகையோரில் கூர்மையானதொரு அச்சாணியாய் திகழ்ந்தவர் பரிமேலழகர் ஆவார்.

“நூலிற் பரித்த உரையெல்லாம்
பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி” (தொண்டை மண்டல சதகம்)

என்றவழி, பரிமேலழகரின் தமிழ், வடமொழிப் புலமையும், அரசியல், பொருளியல், சமயம், மெய்பொருள், தருக்கம், மருத்துவம், உளவியல், இசை, உழவு முதலான பல்துறை அறிவும் அவரது திருக்குறள் உரைவிளக்கத்தில் பல்வேறு இடங்களில் வெளிப்படும் பான்மையினை அறியமுடிகின்றது.

- ‘திருக்குறள் நுண்பொருள்மாலை’ என்னும் நூல் ‘திருக்குருகூர் திருமேனி இந்திரன் கவிராயர்’ என்னும் புலவரால் எழுதப்பட்டது. இந்நூல் பரிமேலழகர் திருக்குறளுக்கு மட்டுமின்றி பரிபாடலுக்கும் உரை எழுதியுள்ளார் என்னும் குறிப்பினைத் தருகின்றது.
- காசிமடத்தார் வெளியிட்ட திருமுருகாற்றுப்படை உரைத்தொகுதியின் வாயிலாக பரிமேலழகர் திருமுருகாற்றுப்படைக்கும் உரை எழுதியுள்ளமை அறியலாகின்றது.

**பரிமேலழகரின் தனித்தன்மைகள்**

திருக்குறளில் பால் விளக்கம், இயல் விளக்கம், அதிகாரப் பெயர் விளக்கம், அடுத்து வரும் அதிகாரத்துடன் இயல்புபடுத்திக் கூறுல், ஓர் அதிகாரத்திலுள்ள குறள்களின் பொருள் இயைபை விளக்கி, தனது வைப்பு முறையை நிறுவுதல், அருஞ்சொற்களுக்கு பொருள் கூறுதல், புது உவமைகளை எடுத்துக் கூறி விளக்கம் தருதல், குறளுரையில் மற்றோர் குறளை மேற்கோள் காட்டி விளக்கம் தருதல், பாடபேதங்கள், உரை வேறுபாடுகளைச் சுட்டிச்செல்லல், பிறர் உரைகள் சிறப்புடைத்தாயின் ஏற்றல், தேவைப்படும் இடங்களில் மறுத்தல், இலக்கண

விளக்கம் கூறுதல், தக்க எடுத்துக்காட்டுகளை வழங்குதல், முரண்பட்ட பொருளைத் தந்து குறளின் பொருளை விளக்கி முரணறுத்தல், மருத்துவம், இசை, சமயம், உளவியல் போன்ற பல்துறைப் புலமை கொண்டு விளங்குதல் எனப் பன்முகத்தன்மையும் பொருந்தியதாய் பரிமேலழகரின் உரை திகழ்கின்றது.

- பரிமேலழகர் திருக்குறளின் நூல் தொடக்கமாக உரைப்பாயிரம் எழுதியுள்ளார். பொருள் பாகுபாடுகளை விளக்கிக் கூறி, அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலுக்கும் விரிவுரை தருகின்றார்.
- ஒவ்வொரு இயல்களையும் செம்மைப்படுத்தி ஆராய்கின்றார். மேலும், ஒவ்வொரு அதிகாரத்திற்கும் தோற்றுவாய் கூறுகின்றார்.
- முன் அதிகாரத்திற்கு இயைபு உரைத்து, பத்துக் குறள்களுக்கும் பொருள்தன்மையை வரையறுத்து உரைக்கின்றார். பின்னர் குறள்களுக்கான பொழிப்புரையை எழுதி, பின் அருந்தொடரை விளக்கிக் கூறுகின்றார்.
- பொழிப்புரையில் அதிகாரத்திற்கு ஏற்ப தேவைப்படும் சொற்களை உட்புகுத்தியும், வேற்றுமை உருபு முதலான இடைச்சொற்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கின்றார்.
- ஏராளமான இலக்கண விளக்கங்களைத் தருவதால் பரிமேலழகர் உரையை "இலக்கண உரை" என்று அழைப்பாரும் உளர். இக்கருத்திற்கு 1885 ஆம் ஆண்டு முருகேச முதலியார் எழுதிய "திருக்குறள் மூலமும் பரிமேலழகர் செய்த இலக்கண உரையும்" எனும் நூல் சான்று பகருகின்றது.
- பரிமேலழகர் பிற உரையாசிரியர்களை மறுக்கும் பொழுது, இலக்கணப் பிழைகளையும் சுட்டிச் செல்கின்றார்.
- இவரது உரையானது பண்டைய வரலாறுகள் பலவற்றை சுட்டிக்காட்டுகின்றது.
- பிறர் உரையை மறுக்கும் போது மனம் நோகாமல் மறுக்கும் திறம் இவரது புலமையில் தென்படுகின்றது.
- பரிமேலழகர் தம் பரந்த சமயப் புலமையின் வெளிப்பாடாக சைவம், சாங்கியம், ஆருகதம், வைசேடிகம், வைணவம், அத்துவிதம், பௌத்தம் முதலான சமயக் கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.
- ஒப்பாய்வுக் கோட்பாட்டில் சிறந்து விளங்குகின்றார். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இலக்கிய, இலக்கண நூல்களையும், மனுதர்மம் உள்ளிட்ட பல வடமொழி நூல்களையும் ஒப்புமைப் படுத்தி திருக்குறளுக்கு உரைவிளக்கம் தந்துள்ளார். சான்றாக,

"கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்" (குறள் 643)

எனும் குறட்பாவிற்குத் தரும் விளக்க உரையில் ‘தகையவாய் என்னும் சொல்லிற்கு தகுதியுடையதாய் என அனைத்து உரையாசிரியர்களும் உரைவிளக்கம் தருகையில், பரிமேலழகர் அப்பண்பை (தகுதி) மொழிவது என்னும் ஒருமையோடு, இயையாமை நோக்கிற்றலர் (தகுதியற்றதை கூறாது விடுதல்) என்று கூறி பிறர் உரைகளை மறுக்கின்றார்.

“துப்புரவு இல்லார் துவரத் துறவாமை

உப்பிற்கும் காடிக்கும் கூற்று” (குறள் 1050)

எனும் குறட்பாவிற்கு, இனி முற்றத்துறத்தலாவது துப்புரவு இல்லாமையின் ஒருவாற்றான் துறந்தராயினார் பின் அவற்றை ‘மனத்தால் துறவாமை’ (உலகிற்காக அல்லாமல் உள்மனத்தால் துறத்தலே சிறந்தது) என்று ஆய்ந்து கூறியுள்ளார்.

**ஒப்பாய்வுக் கோட்பாடு**

திருக்குறளுக்கு உரை விளக்கம் தர முற்படுகையில் சங்க இலக்கிய நூலான புறநானூற்றுப் பாடல்களை பெருமளவில் எடுத்தாண்டுள்ளார் பரிமேலழகர்.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு” (குறள் 72)

எனும் குறளுக்கு உரை விளக்கும் பொழுது,

“தன்னகம் புக்க குறுநடைப் புறவின்

தபுதி யஞ்சிச் சீரை புக்க” (புறநானூறு 43)

எனும் புறநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டி அன்பின் பெருமையை உணர்த்துகின்றார். அதைப்போன்றே, நட்பின் பெருமையை விளக்கும் படியான,

“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாம் கிழமை தரும்” (குறள் 785)

எனும் குறட்பாவிற்குரிய உரை விளக்கத்தில் பலர் கண்டும் சொல்லாட்டியும், மருவுதல் இவ்விரண்டும் இன்றி கோப்பெருஞ்சோழனுக்கும், பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின் அதுவே உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம் என புறநானூற்றுப் பாடலின் (217) செய்தியை ஒப்பிட்டு உரை விளக்கியுள்ளார்.

**பின்தொடர்ந்தவர்கள்**

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடையாளர் தொடர்பு" (குறள் 783)

எனும் குறள்வழி, பரிமேலழகரை பின்பற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சிவப்பிரகாசரும், சிவஞான முனிவரும் ஆவர்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு" (குறள் 1)

என்னும் குறளுக்கு காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே உலகு என உலகின் மேல் வைத்துக் கூறினார் என்று உரைவிளக்கம் கூறியுள்ளார் பரிமேலழகர்.

"அவன் அவள் அது எனும்..."

சிவஞான போத மாபாடியத்தின் முதல் சூத்திரத்திற்கு காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின் என மாறுதல் இன்றி பரிமேலழகத்தை எடுத்துரைத்துள்ளார் சிவஞானமுனிவர். இருவரின் உரைகளையும் பார்க்கும் போது பல சொற்கள் எவ்வித மாறுபாடும் இன்றி ஒத்துள்ளதை அறியமுடிகின்றது. இதன் வழி, பரிமேலழகரால் சிவஞான முனிவர் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது.

அதைப்போன்றே, சிவப்பிரகாசர் தனது பிரபுலிங்கலீலை எனும் நூலில் எடுத்தாண்டுள்ள,

"தக்கவர் தகவிலர் என்பது

ஆங்கவர் பயந்த புதல்வனால் தெளிய

அறமின் என்று அறைக்குவர் பெரியோர்" (அக்கம்மா 20)

என்னும் நூட்பா,

"தக்கவர் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தாற் காணப்படும்" (குறள் 114)

என்ற குறளுக்கு 'எச்சம்' என்ற சொல் 'நன்மக்கள்' என்று பொருள்படும் எனப் பரிமேலழகர் கூறிய உரையின் வழி நின்றது அறியலாகின்றது.

**பரிமேலழகத்துக்கு உரை கண்டவர்கள்**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

பிற்காலத்தில் பரிமேலழகர் உரையை விளக்க, பல்வேறு உரை விளக்கங்கள் தோன்றலாயின.

- 17 ம் நூற்றாண்டில் ரத்தினக்கவிராயர், பரிமேலழகர் உரைக்கு உரை விளக்கமாக "நுண்பொருள் மாலை" எனும் நூலை இயற்றியுள்ளார்.
- 1869 ல் சரவணப்பெருமாள் எனும் நூலாசிரியர் பரிமேலழகர் உரைக்கு உரை விளக்கம் எழுதியுள்ளார்.
- 1885 ல் முருகேசமுதலியார் பரிமேலழகர் உரைக்கு உரை விளக்கம் எழுதி வெளியிட்டுள்ளார்.

மேலும், ராமானுஜக் கவிராயர், வை.மு.சடகோப ராமாச்சாரியார், கே.வடிவேல் செட்டியார், அரசு சண்முகனார் போன்ற பலர் பரிமேலழகருக்கு விரிவுரை எழுதி உள்ளனர். இதன் வழி திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகரின் உரை ஒன்றே பல உரைகள் கண்டு பொருள் விளக்கம் பெற்ற சிறப்பிற்குரியதென்பது புலனாகின்றது.

**வடமொழியும் பரிமேலழகரும்**

பரிமேலழகரின் உரையானது பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தேப் பெற்றுத் திகழினும் வடமொழிக் கருத்துக்களை வலிந்து பொருளாகத் தந்து இருப்பது பரிமேலழகரின் குறையாகப் பல்வேறு அறிஞர்களாலும் கூறப்பட்டுள்ளது. தேவநேயப்பாவாணர், கு.ச.ஆனந்தன், புலவர் குழந்தை போன்றோர் 'ஆரியச்சார்பாளர்' எனப் பல்வேறு தரவுகளுடன் பரிமேலழகரை மறுக்கின்றனர். எனினும், வள்ளுவம் என்பதற்கு இணையாகத் தமிழ் சான்றோர்களால் பரிமேலழகம் போற்றப்படுவது உண்மையாகும். "பரிமேலழகர் எனும் புலமைப் பாறையைச் சுற்றி அடிக்கும் அலை மோதல்களாக எதிர்ப்புகள் அமைகின்றனவே தவிர அப்பாறையின் குறுக்கோட்டம் கண்டு செப்பம் செய்யும் சிற்றுளியாகக் கூட அமையவில்லை" எனும் அறிஞர் கா.அப்பாதுரையின் புகழுரை இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கதாகும்.

**முடிவுரை**

**"திருக்குறளில் பரிமேலழகரின் உரைச்சிறப்புக்கள்"** எனும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் திருக்குறளின் தனிச்சிறப்புக்கள், பரிமேலழகரின் வரலாறு, கல்விப்புலமை, உரைத்திறம் மற்றும் பல்துறை அறிவு முதலான தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், பரிமேலழகரைப் பின்தொடர்ந்தவர்கள், பரிமேலழகத்திற்கு உரை கண்டவர்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. பிற உரையாசிரியர்களுடன் பரிமேலழகர் ஒன்றுபடும் இடங்கள் மற்றும் மாறுபடும் இடங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

## துணை நின்ற நூல்கள்


[1] பி. இரத்தினம், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், இரத்தினநாயகர் சன்ஸ், சென்னை, 1951

[2] இராகவையங்கார், சாசனத் தமிழ்க் கவி சரிதம், பாரதி புத்தகாலயம், சென்னை.

[3] ச. சீனிவாசன், திருக்குறள் பரிமேலழகர் உரை, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002

[4] முத்து இராமமூர்த்தி, தொண்டை மண்டல சதகம், கௌரா பதிப்பகம், சென்னை

[5] அருணை வேலு முதலியார், சிவஞான போத மாபாடியம், தமிழ் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சை, 1991.

[6] சிவப்பிரகாச சுவாமிகள், பிரபுலிங்கலீலை, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1954.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR